# டிசம்பர் – 13 – புதன்

**புனித லூசியா**

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! ஆவரது திருப்பெயரை ஏத்திடு! திபா. 103:1**

## முதல் வாசகம் : ஏசாயா 40 : 25 - 31

”யாருக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? எனக்கு நிகரானவர் யார்?” என்கிறார் தூயவர். உங்கள் கண்களை உயர்த்தி மேலே பாருங்கள் அவற்றைப் படைத்தவர் யார்? வான் படையை எண்ணிக்கை வாரியாய் வெளிக்கொணர்ந்து ஒவ்வொன்றையும் பெயர் சொல்லி அழைப்பவர் அன்றோ? அவர் ஆற்றல்மிக்கவராயும் வலிமை வாய்ந்தவராயும் இருப்பதால் அவற்றில் ஒன்றேனும் குறைவதில்லை. ”என் வழி ஆண்டவருக்கு மறைவாய் உள்ளது என் நீதி என் கடவுளுக்குப் புலப்படவில்லை” என்று யாக்கோபே, நீ செல்வது ஏன்? இஸ்ரயேலே, நீ கூறுவது ஏன்? உனக்குத் தெரியாதா? நீ கேட்டதில்லையா? ஆண்டவரே என்றுமுள கடவுள் அவரே விண்ணுலகின் எல்லைகளைப் படைத்தவர் அவர் சோர்ந்து போகார் களைப்படையார் அவரது அறிவை ஆய்ந்தறிய இயலாது. அவர் சோர்வுற்றவருக்கு வலிமை அளிக்கின்றார் வலிமை யிழந்தவரிடம் ஊக்கம் பெருகச் செய்கின்றார். இளைஞர் சோர்வுற்றுக் களைப்படைவர் வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர். ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர். கழுகுகள்போல் இறக்கை விரித்து உயரே செல்வர் அவர்கள் ஓடுவர் களைப்படையார் நடந்து செல்வர் சோர்வடையார்.

**பதில்பாடல் :** என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு

## நற்செய்தி : மத்தேயு 11 : 28 - 30

அக்காலத்தில் இயேசு கூறியதாவது: ”பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது” என்றார்

**தியானம்:** அன்புள்ள இடத்தில் மலைச்சுமையும் மாலைச் சுமையாகிவிடும், அன்பு இல்லாத இடத்தில் மாலைச் சுமையும் மலைச் சுமையாகிவிடும் என்று சொல்வார்கள். காரணம் அன்பு உணர்வு கொண்டு சுமக்கின்ற எதுவும் பழுவாகத் தெரிவதில்லை. நம் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக நமது சுமைகள் இயேசுவுக்கு கடினமாகத் தெரியவில்லை, நமது சுமைகளை நாம் சுமக்க இயலாமல், வருந்துகின்ற போது உண்மையாக, நேர்மையாக, வாழ்வதால் சமுதாயத்தில் சந்திக்கும் துன்பங்களைப் பார்த்து நாம் பயப்படுகின்ற போது, சோர்வடைகின்றபோது இறைவனின் இரக்கம் நமக்கு நிறைவாக கிடைக்கின்றது. எனவே தான் இயேசு சொல்லுகின்றார் “பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்வர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பினால் நம் சுமைகளைச் சுமக்க தயாராக இருப்பதுபோல், நாமும் மற்றவர்களின் சுமைகளைத் தாங்குவதற்கு தயாராக இருப்பதற்கு நாம் அழைக்கப்பட்டடிருக்கின்றோம். இந்த உலகத்திலே நோயிலிருப்பவர்களுக்கும், மற்றவர்களால் கைவிடப் பட்டவர்களுக்கும் ஆறுதலாகவும் அவர்களின் சுமைகளில் பங்குபற்றுகிறவர்களாகவும் வாழ்வதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் அழைக்கப் பட்டிருக்கின்றார்கள். ஏழைகளின் மட்டில் அதிகமாக அன்பு காட்டி அன்பின் வடிவமாக திகழ்ந்தவர் அன்னை திரேசா, அன்பு ஒன்றையே தமது வாழ்வில் முழுநோக்கமாக கொண்டு வாழ்ந்து மக்கள் மத்தியில் பணி செய்தவர், மற்றவர்களின் சுமைகளை தானே சுமந்வர். இயேசுவின் அடிச்சுவட்டை இறுதிவரை பின்பற்றி வாழ்ந்தவர். இயேசுவின் அன்பில் நாமும் இணைந்து வாழ்திடுவோம் ஆமென்.